# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
# S.C. NO. 112/2018

**21.01.2025 அ.சா.6 பச்சைமுத்து த.. பெ.ராஜா .**

A1 and 2 present.

**எதிரிகள் தரப்பில் குவிமுச. 311 மனு அனுமதிக்கப்பட்டு அ.சா. 6 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் 1.. 2 தரப்பில் குறுக்கு விசாரணை-**

இறந்துபோன செல்வம் எனக்கு பங்காளி என்றால் சரியல்ல . அவர் என் பெரியம்மா மகளின் கணவர் . எனக்கு சண்டை எப்படி நடந்தது என்று நேரடியாக தெரியாது . இறந்துபோன செல்வத்தை திருவண்ணமலை மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை .. செல்வத்திற்கு காயம்பட்ட விவரம் எனக்கு அன்றே தெரியும் . நான் பின்னிட்டு மருத்துவமனைக்கு செல்லவில்லை .. காயம்பட்ட செல்வத்தை சென்னை மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அழைத்துசென்றார்கள் என்றால் சரிதான் . நான் சென்னை மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் புகார் கொடுக்க காவல் நிலையம் செல்லவில்லை . இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட இளஞ்சிறார் பார்த்திபன் என்பவர் மீது திருவண்ணாமலை இளஞ்சிறார் நீதி குழுமத்தில் நடந்த விசாரணையில் நான் சாட்சி அளித்தேனா என்றால் இல்லை. நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன் . என்னிடம் காண்பிக்கப்படுவது இளஞ்சிறார் நீதிக்குழுமத்தில் நான் அளித்த சாட்சியத்தின் நகல் என்றால் சரிதான் . அந்த விசாரணையின்போது நான் காயம்பட்ட செல்வம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது அங்கு இருந்ததாகவும் , அங்கு அ-சா.1 ஐ விசாரித்ததாகவும் அவர் வாக்குமூலம் பெற்றுச்சென்றதாகவும் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரிதான் . இளஞ்சிறார் நீதி குழுமத்தில் நடந்த விசாரணையில் நான் சென்னை மருத்துவமனைக்கு சென்றதாக சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் நான் கையொப்பம் செய்தபோது " பொன்னுசாமி அருகில் இல்லை " என்று உள்ளது என்றால் சரிதான் . என் வீடு கீழ்பென்னாத்தூரில் இருந்து திருவண்ணணாமலைக்கு வரும் பிரதான சாலையில் உள்ளது என்றால் சரிதான் . நாரியமங்கலம் கிராமம் எங்கள் ஊரில் இருந்து 2 கி.மீ தூரம் உள்ளது என்றால் சரிதான் . வழக்கின் ்எதிரிகளை போலிசார் எத்தனை மணிக்கு கைது செய்தார்கள் என்று நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மதியம்சுமார் 2 லிருந்து 2.30 மணிக்குள் கைது செய்தார்கள் . நான் சென்றபோது போலிசார் எதிரிகளுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களை சிறுநாத்தூர் பஸ் நிறுத்தத்தில் தான் நான் முதலில் அவர்களை பார்த்தேன் . நான் சென்றபிறகு தான் போலிசார் எதிரி சொன்னதை

எழுதினார்கள். வாக்குமூலம் எழுதுவதற்கு முன்பு போலிசார் எதிரிகளிடம் என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியாது . சிறுநாத்தூர் பஸ்நிறுத்தம் அருகே கடைகள் உள்ளது என்றால் சரிதான் . அங்கு கிராம மக்கள் அதிகமாக நடமாடுவார்கள் என்றால் சரிதான். எதிரி சொன்னதை எழுதியவுடன் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நாரியமங்கலத்தில் எதிரியின் வீடு உள்ள தெருவில் 30 க்கும் மேற்பட்ட வீடுகள் எதிரும் , புதிருமாக உள்ளன. அந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட கல்லை போலிசார் புகைப்படம் எடுத்தார்கள் . அது வீடு கட்டும் கருங்கல் அல்ல . அந்த கல்லின் வடிவம் என்னவென்று என்னால் சொல்லமுடியாது . கைப்பற்றியதாக கூறப்படும் கல்லில் ரத்த மாதிரிகள் இருந்ததா என்றால் இருந்தது . . அந்த கல் எதிரியின் வீட்டின் பின்புறம் உள்ள புதரில் இருந்தது . அந்த கல் எங்கிருந்து கைப்பற்றப்பட்டது என்று எழுதப்பட்டிருந்தது. அந்த கல் திறந்த வெளியில்தான் இருந்தது. சம்பவம் நடந்த அன்றும், அதை தொடர்ந்து 2 நாட்களும் அந்த ஊரில் மழை பெய்தது என்றால் இல்லை . செல்வத்திற்கும் , பொன்னுசாமிக்கும் இடையே இருந்ததாக சொல்லப்படும் நிலத்தகராறு சம்மந்தமாக காவல் நிலையத்திலோ , நீதிமன்றத்திலோ எந்த வழக்கும் இல்லை என்று சொன்னால் சரிதான். எதிரியின் வீடு 20 அடி சாலையில் உள்ளது . ஒவ்வொரு வீட்டிற்கு முன்பும் தண்ணீர் பிடிப்பதற்கு பள்ளம் தோண்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை . இறந்து போன செல்வம் என்பவர் எனது நெருங்கிய உறவினர் என்பதால் அ .சா.1 மற்றும் காவல் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க காவல் துறையினர் தயார் செய்த ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல . எதிரிகளை நான் சொன்ன நேரத்தில் போலிசார் கைது செய்தார்கள் என்றும் , 1ம் எதிரி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில் ஒரு கல் கைப்பற்றியதாக சொல்லப்படுவது பொய் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.